வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

விலை ரூ. 30/=




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 09.12.2025 செவ்வாய்க்கிழமை | இதழ் : 343 | பக்கங்கள் : 08

# இலங்கையின் மீள்கட்டமைப்புக்கு ஐ.நா. சபை முழுமையான ஆதரவு

## 45 இலட்சம் டொலர்களை வழங்குகிறது

கொழும்பு, டிசெம்பர் 09

அண்மைய தீவிர வானிலை பேரழிவைத் தொடர்ந்து மீட்பு மற்றும் மறுகட்டமைப்புக்கு ஐக்கிய நாடுகள் சபையிடமிருந்து இலங்கைக்கு முழு ஆதரவு கிடைக்கும் என்று இலங்கைக்கான ஐ. நா. வதிவிட பிரதிநிதி மார்க் ஆண்ட்ரூ தெரிவித்துள்ளார். வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத்துடனான சந்திப்பின் போது அவர் இந்த உறுதிமொழியை அளித்தார்.

பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு உடனடி நிவாரணத்தை ஆதரிப்பதற்காக ஐ.நா. தனது அவசரகால மீட்பு நிதியத்தின் கீழ் முதற்கட்டமாக 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க முடிவு செய்துள்ளதாக ஆண்ட்ரூ கூறினார்.

கூட்டத்தின்போது இந்தத் தொகை அமைச்சர் ஹேரத்திடம் அடையாளமாக ஒப்படைக்கப் பட்டது.

உணவுப் பாதுகாப்பு, வீட்டுவசதி, குடிதண்ணீர், கல்வி, சுகாதாரம், விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைகளில் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி கவனம் செலுத்தும் என ஐ. நா. தெரிவித்துள்ளது.



தேவைகள் குறித்த விரிவான மதிப்பீட்டை மேற்கொள்வதற்காக ஐ. நா. மனிதாபிமான விவகாரங்களுக்கான

07

## வெளிநாட்டு உதவிகளை ஒருங்கிணைத்து உரியவகையில் வழங்குவதற்கு விசேட குழு

கொழும்பு, டிசெ. 09

பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளை முறையாக ஒருங்கிணைத்து, உரிய நபர்களுக்கு வழங்குவதற்காக தேசிய அளவிலான குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் விசேட ஊடக சந்திப்பில்

07

## அணையா விளக்கு தூபி சேதம் ஐக்கிய மக்கள் சக்தி முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 09

செம்மணியில் அமைந்திருந்த அணையா விளக்கு போராட்ட நினைவுத்தூபியை மீண்டும் சேதப்படுத்தியவர்களை கைது செய்யுமாறுகோரி யாழ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை ஜனாதிபதி அனுர

07

## வடக்கில் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்புநிலைக்கு திரும்புவதை உறுதிசெய்க

### அரச உயரதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்புரை

யாழ்ப்பாணம், டிசெ. 09

வடக்கு மாகாணத்தில் பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்குக் கரங்கொடுத்து, அவர்களை மீட்டெடுத்து வாழ்வாதாரத்தை உறுதி செய்வது எமது தார்மீகப் பொறுப்பாகும். பாதிக்கப்பட்ட மக்கள் விரைவாக இயல்பு நிலைக்குத் திரும்புவதை உறுதி செய்யும் அதேவேளை, மாகாணத்தின் வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களையும் எவ்வித தாமதமுமின்றித் துரித கதியில் நிறைவு செய்ய வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் அனைத்துத் திணைக்களத் தலைவர்கள் மற்றும் செயலாளர்களுடனான அவசர உயர்மட்டக் கலந்துரையாடல், ஆளுநர் செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை காலை நடைபெற்றது. இக்கலந்துரையாடலிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

07

## 635 பேர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 09

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக 635 பேர் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்குண்டவர்களை மீட்கும்

07

## ரூ.400 மில்லியன் பெறுமதியான உதவியுடன் நேற்று இலங்கைக்கு வந்தது சீன விமானம்!

கொழும்பு, டிசெ. 09

பேரிடரால் பாதிக்கப்பட்ட இலங்கையில் மக்களுக்காக சீனாவால் நன்கொடையாக வழங்கப்பட்ட சுமார் 400 மில்லியன் ரூபாய் பெறுமதியான மனிதாபிமான உதவித் தொகை, நேற்றுக் காலை சீன சரக்கு விமானம் மூலம் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டது.

ஷங்காயிலிருந்து புறப்பட்ட போயிங் 747-400 சரக்கு சரக்கு விமானம் நேற்று காலை 10:47 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிவாரணப் பொருட்களில் 84,525 கிலோ எடையுள்ள லைப் ஜக்கெட்டுகள், கூடாரங்கள், போர்வைகள்

07

## கொழும்பில் கடும் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, டிசெ. 09

இலங்கையில், அடுத்த சில நாட்களில் குறிப்பாக கொழும்பில், பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாக பிபிசி வானிலை முன்னறிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில்

07

## இந்திய மீனவரை கட்டுப்படுத்தாவிடில் நாமே கடலில் இறங்கிப் போராடுவோம்

### யாழ். மாவட்ட மீனவர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 09

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை எனில் நாமே கடலில் இறங்கி போராடுவோம் என யாழ். கடற்தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் , வடமராட்சி கிழக்கு தொடக்கம் நெடுந்தீவு வரையான மீனவர் சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் மாவட்ட நீரியல்

07

## நாயாறு படகு சேவைக்கு மட்டுப்பாடு

முல்லைத்தீவு, டிசெ. 09

முல்லைத்தீவிலிருந்து நாயாறு பாலம் வழியாக கொக்கிளாய்க்கான போக்குவரத்து நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

கடலின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் மாலை ஆறு மணி வரை மாத்திரமே நாளாறு களப்பில் படகுச் சேவையை மேற்கொள்ள முடியும் கடற்படை அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

07

## நாட்டு மக்கள் துன்பப்படுகிறார்கள் அவசரமாக பாராளுமன்றை கூட்டுக

### நாமல் ராஜபக்ஷ கோரிக்கை

கொழும்பு, டிசெ. 09

அவசரமாக பாராளுமன்றத்தை கூட்டுமாறு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் நாமல் ராஜபக்ஷ தனது எக்ஸ் தளத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

"நாட்டு மக்கள் துன்பப்படுகிறார்கள். கிராமங்கள் முழுமையாக நீரில் மூழ்கியுள்ளன.

07

## நிவாரண பொருட்களுடன் யாழ். வந்தது அமெ. விமானம்

யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் அமெரிக்க அரசின் நிவாரணப் பொதிகளுடன் கூடிய அமெரிக்க விமானம் நேற்று காலை தரையிறங்கியது.

குறித்த நிவாரணப் பொதிகள் அமெரிக்கா இராணு வத்தினரால் இலங்கை விமானப்படை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

07



## கடற்படையினரை கௌரவியுங்கள்!

### வெள்ளத்தில் சிக்கிய பஸ்ஸில் பயணித்த பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 09

வெள்ளத்தில் சிக்கிய பேருந்தில் இருந்து மீட்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பாக 24 மணி நேரத்திற்கு மேலாக தங்கியிருந்த கடற்படையினருக்கு கௌரவம் அளிக்க வேண்டும் எனவும் , அது தொடர்பில்

07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குத்தொடுவாய் பகுதி தமிழ் மக்களின் பூர்வீக காணிகளில் அத்துமீறிய குடியேற்றம்

## பெரும்பான்மை இனத்தவர்கள் ஆக்கிரமிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 09

முல்லைத்தீவு - கரைதுறைப் பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட எல்லைக் கிராமங்களில் ஒன்றான கொக்குத் தொடுவாய் 15ஆம் கட்டையில் தமிழ் மக்களின் பூர்வீக காணிகளை, கொக்கிளாய் முகத்துவாரத்தில் அத்துமீறிக் குடியேறியிருக்கும் பெரும்பான்மை இனத்தவர்கள் ஆக்கிரமிப்புச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த ஆக்கிரமிப்பு முயற்சியைத் தடுப்பதற்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் உள்ளிட்ட உரிய தரப்புகள் நடவடிக்கை எடுக்கத் தவறினால், தாம் களத்தில் இறங்கி அபகரிப்பு முயற்சியை தடுத்து நிறுத்தவேண்டிய நிலை ஏற்படுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

குறித்த ஆக்கிரமிப்பு முயற்சி தொடர்பில் நேரடியாகப் பார்வையிட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொக்குத்தொடுவாயிலிருந்து தமிழ் மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டில் இராணுவத்தினரால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறாக எமது தமிழ் மக்கள் இடப்பெயர்விற்கு முன்னர் சிறுதானியப் பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்திய சுமார் நூறு ஏக்கருக்கும் மேற்பட்ட அவர்களது பூர்வீக காணிகள், கடந்த 2011ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்திற்குப் பிற்பாடு வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் வனவளத் திணைக்களம் போன்ற திணைக் களங்களால் ஆக்கிரமிக்கப்பட்டு எல்லைக்கற்களும் இடப்பட்டுள்ள.

இத்தகைய சூழலில் பெரும்பான்மை இனத்தவர்கள் சிலர், தமிழ் மக்களுக்குரிய பூர்வீக சிறுதானிய பயிர்ச் செய்கைக் காணிகளை ஆக்கிரமிக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தஅபகரிப்பு முயற்சிகள் இடம்பெறும்போது கொக்குத் தொடுவாய் வடக்கு பகுதி மக்கள் தமது கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டுத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இத்தகைய ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளுக்குரிய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டும்-என்றார். (அ)

# சர்வதேச சத்திர சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் தலைவராக யாழ். தமிழர்!

யாழ்ப்பாணம், டிசெ. 09

அமெரிக்க சான்போட் மருத்துவக் கல்லூரியின் உலகப் புகழ்பெற்ற சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சைப் பேராசிரியரும், மருத்துவ நிபுணருமான தவம் தம்பிப்பிள்ளை சர்வதேச சத்திர சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் புதிய தலைவராகப் பொறுப் பேற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் - கைதடியை சேர்ந்த மருத்துவ நிபுணர் தவம் தம்பிப்பிள்ளை 2003ஆம் ஆண்டு ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் முதன்முதலில் சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சையை ஆரம்பித்து வைத்திருந்தார்.

இதன் பின்னர் பல சிறுநீரக மாற்றுச் சத்திரச் சிகிச்சைகளை இவர் வெற்றிகரமாக மேற் கொண்டிருந்தார்.

அமெரிக்க மருத்துவ உதவி நிதியம் இலங்கையில் பல்வேறு சுகாதார, கல்வி மற்றும் வலு விழந்தவர்களுக்குப் பல மில்லியன் அமெரிக்க டொலர்கள் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. இந்நிலையில் அதன் உறுப்பினராக கடந்த 20 ஆண்டுகளாக இலங்கையில் தொண்டு பணிகளில் ஈடுபட்டுப் பல்வேறு சேவைகளை இவர் ஆற்றி வருகின்றார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. (அ)



# பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டரங்கு வேண்டுமென கோரி யாழில் நேற்று போராட்டம்



யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்கு வேண்டுமெனக் கோரி போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் யாழ்ப்பாண மாவட்ட உள்ளக விளையாட்டு அரங்குக்கான அடிக்கல் பழைய பூங்கா வளாகத்தில் அண்மையில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களால் நாட்டப்பட்டது.

இந்நிலையில் பழைய பூங்காவுக்கு மத்தியில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைத்தல் உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகள் என்ற பெயரில் நடைபெறும் சகல நடவடிக்கைகளுக்கும் எதிராக கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடைக் கட்டாணை ஒன்றை வழங்கியது.

இந்நிலையில் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்கு தேவை என்பதை வலியுறுத்தி விளையாட்டு துறை சார்ந்தவர்கள் பேரணியை முன்னெடுத்தனர்.

ஜோன். பொஸ்கோ ஆரம்ப பாடசாலை முன்பாக கூடிய போராட்டக்காரர்கள் அங்கிருந்து பேரணியாக பழைய பூங்கா பகுதிக்கு சென்று அப்பகுதியை பார்வையிட்டதுடன் இறுதியில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு சென்று ஜனாதிபதிக்கான மகஜரை மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபனிடம் கையளித்தனர். (அ)

# இலவச மருத்துவ முகாம்

முல்லைத்தீவு, டிசெ. 09

முல்லைத்தீவு முன்னேற்றக் கழகத்தின் ஒழுங்குபடுத்தலில் இலவச மருத்துவ முகாம் ஒன்று கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த மருத்துவ முகாமில் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் இலவச மருத்துவ பரிசோதனை, ஆலோசனை மற்றும் மருந்துகளை பெற்றுக்கொண்டனர்.

பாலகிருஷ்ணன் நவநீதன் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த இலவச மருத்துவ முகாமில் வைத்தியர்கள் கலந்து கொண்டு மக்களுக்கான சிகிச்சைகளை வழங்கினர். இதில், முல்லைத்தீவு முன்னேற்றக் கழக நிறுவுநர் சட்டத்தரணி வி. எஸ். எஸ்.தனஞ்சயன் உட்பட பலர் கொண்டனர். (அ)

# கரம்பைக்குறிச்சி ஆழ்வார்மடம் வீதிப் புனரமைப்பில் முறைகேடு

தென்மராட்சி, டிசெ. 09

வரணி கரம்பைக்குறிச்சி ஆழ்வார் மடம் வீதியின் புனரமைப்பில் முறைகேடு இடம்பெற்றுள்ளதோடு, தரமற்றதாக அமைக்கப்பட்டுவருவதாக தெரிவித்து பிரதேச மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

கரம்பைக்குறிச்சி ஆழ்வார் மடம் வீதியின் புனரமைப்பு கடந்த சில நாட்களாக இடம் பெற்றுவருகிறது.

இந்நிலையில், நிர்ணயிக்கப்பட்ட அளவுகளில் மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படாமல், தரமற்று வீதி செப்பனிடப்பட்டுவருவதாக மேற்பார்வைக் குழுவால் உறுதி செய்யப்பட்டது.

அதனையடுத்து சாவகச்சேரி பிரதேச சபையின் கவனத்துக்கு விடயம் கொண்டுவரப்பட்டது.

இருந்தபோதிலும், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் வட்டார உறுப்பினரின் பதில்கள் திருப்தியளிக்க வில்லை என பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து நேற்று ஒன்று கூடிய பிரதேச மக்கள், தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (அ)

# அரச சேவைக்கு நியமனம் பெறுவோர் கதிரைக்கு பாரமாக இருக்கக்கூடாது!

யாழ்ப்பாணம், டிசெ. 09

அரச சேவைக்கு நியமனம் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொருவரும் தாம் அமரும் கதிரைக்கு பாரமாக இல்லாமல், அந்தக் கதிரைக்குப் பெருமை சேர்க்கக் கூடிய வகையில் பணியாற்ற வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி மன்றங்களுக்காகத் தெரிவு செய்யப்பட்ட 14 வருமான பரிசோதகர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு, அண்மையில் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இயற்கைப் பேரிடர் காரணமாக எளிமையாக நடைபெற்ற, இந்நிகழ்வில் உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

பலர் ஓய்வூதியத்தை மட்டுமே இலக்காகக் கொண்டு அரச சேவையை நாடுகின்றனர். ஆனால், இது மக்களுக்குச் சேவை செய்வதற்கு இறைவனால் வழங்கப்பட்ட ஒரு பாக்கியமாகும். இச்சந்தர்ப்பத்தைத் தவறாகப் பயன்படுத்தித் தங்கள் சொந்தத் தேவைகளை மட்டும் நிறைவேற்றிக் கொள்பவர்கள் இருக்கிறார்கள். அவ்வாறானவர்களாக நீங்கள் இருக்கக் கூடாது.

உங்களிடம் சேவை நாடி வரும் பொதுமக்கள் அனைவரும் உங்கள் உறவினர்களே. அவர்களை இன்முகத்துடன் வரவேற்று, நேர்மையாகவும், விரைவாகவும், அன்பாகவும் சேவை செய்ய வேண்டும்.

இன்று உள்ளூராட்சி மன்றங்கள் ஒவ்வொன்றும் தங்களது வருமானத்தை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. அந்த வருமானத்தைத் திரட்டிக் கொடுப்பதில் வருமானப் பரிசோதகர்களான உங்களின் பங்கு அளப்பரியது. நீங்கள் நேர்மையாகச் செயற்பட்டால்தான் சபைகளின் வருமானம் அதிகரிக்கும். உங்களின் பணியின் கனதியை உணர்ந்து நீங்கள் செயற்பட வேண்டும்.

நீங்கள் வடக்கு மாகாணத்திற்காகவே தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். எனவே, மாகாணத்தின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்றத் தயாராக இருக்க வேண்டும். உங்களுக்குத் தேவைப்படும் மேலதிக பயிற்சிகளை வழங்கி உங்களை வழிப்படுத்த மாகாண நிர்வாகம் தயாராக உள்ளது-என்றார்.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாணத்துக்கு 131 வருமானப் பரிசோதகர் ஆளணி அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், 51 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதில் 14 வெற்றிடங்களை நிரப்புவதற்கு தற்போது அனுமதி கிடைக்கப் பெற்றதற்கு அமைவாகவே இந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றன, எனக் குறிப்பிட்டார். (அ)

# ஆசிரியர் கலாசாலையின் கலைமலர் சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 09

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கலைமலர் சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வு நாளை புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்து மலரை வெளியிட்டு வைப்பார். மலர் ஆசிரியர் விரிவுரையாளர் வே. சேந்தன் மலர் பற்றிய அறிமுக வுரையை ஆற்றுவார்.

கலாசாலையின் 102 வருட வரலாற்றில் வெளிவரும் 49 ஆவது மலர் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
09.12.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# உலகின் நிறுவை நீதி

சூறாவளியால் ஏற்பட்ட இடரைப் போக்குவதற்காக பல நாடு களும் இலங்கைக்கு உதவி வருகின்றன. இந்தியா முதலில் உதவினாலும் தற்போது அமெரிக்கா அதன் இராணுவத்தினரை மீட்புப் பணி களுக்காக அனுப்பியிருப்பதானது கவனிக்கத்தக்கது. ஒன்றுக்கொன்று எதிரான நாடுகள் அனைத்தும் போட்டி போட்டுக்கொண்டு இலங் கைக்கு உதவி வருகின்றன. முதல்முறையாக இஸ்ரேல்கூட நிவா ரணப் பொருட்களை அனுப்பியிருக்கின்றது. இது, அடிப்படையில் இலங்கைமீதான அனுதாபமா அல்லது அவர்களின் எதிர்காலத் தேவைகளுக்கான நட்பு ரீதியான ஊடாட்டமா?

2009இல் யுத்தம் முடிவுற்றபோது வடக்கு - கிழக்கு குறிப்பாக, வன்னிப் பிரதேசம் பெருமளவில் பாதிக்கப்பட்டது. மேற்குலகின் ஆயு தங்களால் தமிழர் நிலம் ரணமானது. யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களின் மீட்சிக்கான எந்த வொரு விசேட திட்டங்களும் இடம்பெறவில்லை. இதற்கு ராஜபக்ஷ அரசாங்கமும் ஒரு பிரதான காரணம் என்றாலும்கூட, தமிழக் கட்சிகளின் அசட்டை யீனமோ அல்லது உலகைக் கையாளும் திறமையின்மையோ, வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்கள், சொத்துகளை இழந்த மக் கள் இன்றுவரையில் கண்டுகொள்ளப்படவேயில்லை. அதற்கான நஷ்டஈடு பற்றியும் எந்தவோர் அரசாங்கமும் பேசியதில்லை.

ஆனால், யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து, இலங்கையின் மனித உரிமைகள் மீறல் தொடர்பிலான குற்றச்சாட்டுகள் முன் வைக் கப்பட்டன. ஆண்டுகள் தோறும் பரிந்துரைகள் வந்ததே தவிர, பாதிக் கப்பட்ட மக்களுக்கு நீதி வரவில்லை. அப்படி வரலாம் - இப்படி வர லாம் என்னும் நம்பிக்கைகளும் பெருமளவுக்கு தேய்ந்து விட்டது. உலகம் கொழும்போடுதான் இருந்தது - இருக் கின்றது என்பதை இப்போது புரிந்துகொள்வதற்கு அதிகம் முயற் சிக்க வேண்டியதில்லை.

ஒருகாலத்தில் இந்திய - அமெரிக்க எதிர்ப்புக்குப் புகழ்பெற்ற ஓர் இயக்கம். அதிலும், இரண்டு தடவைகள் ஆயுதப் புரட்சியில் ஈடுபட்ட இயக்கம் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் நிலையில், அவர்களுடைய கடந்தகாலம் இப்போது எவருக்கும் பிரச்னைக்கு ரியதல்ல. அதிகாரத் தில் இருப்பவர்களோடு மட்டும்தான் உலகம் ஊடாடும் என்பதுதான் விடயம். ஏனெனில், அவர்களுடைய நலன்சார் அரசியல் சதுரங் கத்துக்கு அதிகாரத்தில் இருப்பவர்கள் தான் தேவை - இல்லாவிட்டால் எதிர்காலத்தில் அதிகாரத்திற்கு வரக்கூடியவர்களாக இருக்க வேண்டும். மொத்தத்தில் அவர்க ளுக்குத் தேவைப்படுகின்றார்களா என்பதுதான், அவர்களுடைய தராசின் நிறுவை நீதி.

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியபோதும் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவக்கூடாது. தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்த்தால்தான் உதவிகள் வழங்கவேண்டும் என்று அப்பாவித்தனமாகக் கூறியவர்களும் உண்டு. ஆனால், நாட் டின் பொருளாதார நெருக்கடிக்கு உள்நாட்டு யுத்தத்தை ஒரு காரண மாகக்கூட, கொழும்பு முன்னிறுத்தவில்லை. கொரோனா, கோட்டா பயவின் தவறான முகாமைத்துவம் என்றவாறே விடயத்தை முன் வைத்தது. அதுதான், உலகிலும் எடுபட்டது. என்னதான் கத்தினாலும் உலகின் காதுகளில் தமிழர்களுக்கு சாதகமாக ஏதும் விழப்போவ தில்லை என்பதுமட்டும் உண்மை. தமிழர் அரசியலின் ஜாம்பவான் களாகதங்களைநம்பிக் கொண்டிருப்பவர்கள் அனை வரும், இந்த உண்மைகளை மனதில் நிறுத்தித்தான் சிந்திக்கவேண்டும்.

## அனர்த்தத்தின் பின்னர் ஏற்படும் நோய்கள் குறித்து அவதானம்!

கொழும்பு, டிசெ. 09

நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமையின் பின்னர் ஏற்படக்கூடிய தொற்று நோய்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனத் தொற்றுநோய் தடுப் புப் பிரிவு தெரிவித்துள் ளது.

இந்த நிலைமையில் கொதிக்க வைத்த நீரைப் பருகுவது மிகவும் முக்கிய மானது என அப்பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் அதுல லியனபத்திரண தெரிவித்தார்.

அத்துடன், குடிதண்ணீ ருக்காகப் பயன்படுத்தப் படும் கிணறுகள் வெள்ள நீரால் நிரம்பி வழிந்திருந் தால், அவற்றை மீண்டும் பயன்படுத்துவதற்கு முன் னர் முறையாகச் சுத்தம் செய்து, குளோரின் இட்டு தொற்று நீக்கம் செய்த பின் னரே பயன்படுத்த நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட் டினார்.

மேலும், சமைத்த உண வுகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். சுத்த மாக உணவைச் சமைப்ப துடன், வயிற்றுப்போக்கு போன்ற நோய் நிலைமை களைக் கொண்ட ஒருவர் உணவு சமைக்கும் செயற் பாட்டில் ஈடுபடக்கூடாது என்றும் அவர் குறிப்பிட் டார். (அ)

## தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் 32 பறவைகளை திருடிய ஒருவர் கைது

கொழும்பு, டிசெ. 09

தெஹிவளை மிருகக் காட்சிசாலையில் 32 வெளி நாட்டு பறவைகளை திரு டிய சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கல்கிஸை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் கல்கிஸை பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் மேற்கொள் ளப்பட்டு வரும் விசார ணைகளுக்கு அமைய இந்த கைது நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தெஹிவளை- நெதிமால பகுதியை சேர்ந்த 24 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

சமையல் பணிகளில் ஈடுபட்டுவந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர் பில் கல்கிசை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின் றனர். (அ)

## முட்டையின் விலை ரூ. 70ஆக உயரலாம்

கொழும்பு, டிசெ. 09

நாட்டில் ஏற்பட்ட அனர்த் தத்தால் எதிர்வரும் பண்டிகைக் காலப்பகுதியில் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளுக்கு தட் டுப்பாடு ஏற்படக்கூடும். வெள் ளத்தில் சிக்கி பண்ணையில் வளர்க்கப்பட்டு வந்த 28 இலட் சத்துக்கும் மேற்பட்ட கோழி கள் உயிரிழந்துள்ளன. இதனால் வரும் நாட்களில் முட்டை ஒன் றின் விலை 70 ரூபாவாக உயர்வ டையும் என அகில இலங்கை முட்டை வர்த்தகர்கள் சங்கத் தின் தலைவர் அன்ரன் அப்பு ஹாமி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் முட்டை ஒன்றின் விலை 70 ரூபாவாக உயரும் அபாயம் உள்ளது. இந்த விலை யேற்றத்திற்கான பிரதான கார ணம் பண்ணையில் வளர்க்கப் பட்ட பெருமளவான கோழிகள் உயிரிழந்துள்ளன. மோசமான வானிலையால் ஏற்பட்ட பெரும் வெள்ளம் காரணமாக பண்ணை களில் வளர்க்கப்பட்ட சுமார் 28 இலட்சத்துக்கும் அதிக எண் ணிக்கையிலான கோழிகள் உயிரிழந்துள்ளன.

இதனால் கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தி கடு மையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஏனைய கால்நடை உற்பத்திக ளும் இதனால் நெருக்கடிக்குள் ளாகியுள்ளன. கோழி இறைச்சி யின் விலை தற்போது குறை வாக இருப்பினும், எதிர்வரும் பண்டிகைக் காலத்தின்போது கோழிகளுக்கு தட்டுப்பாடு ஏற் படக்கூடும்-என்றார். (அ)

## இந்திய மருத்துவர்கள் குழு கண்டியில்

கொழும்பு, டிசெ. 09

இலங்கையில் ஏற்பட்ட அதிதீவிர வானிலை காரண மாக பாதிக்கப்பட்ட 2ஆயி ரத்து 200இற்கும் மேற்பட் டோருக்கு இந்திய மருத்து வக் குழுவினர் சிகிச்சை அளித்துள்ளதாக அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.


அத்துடன், இந்திய மருத் துவ குழுவினால் கண்டியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக மருத்துவமனை யில் பலர் சிகிச்சை பெற்று வருவதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதிதீவிர வானிலை காரணமாக இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து மனி தாபிமான உதவிகளை வழங்கிவருகிறது.

இதற்கமைய, அவசர சுகாதார உதவிகளை வழங் குவதற்காக இந்தியா, நடமா டும் மருத்துவமனை மற்றும் 70 இற்கும் மேற்பட்ட மருத் துவப் பணியாளர்களை இலங்கைக்கு அனுப்பியது.

இந்தநிலையில், இந்திய வான்படையின் சி-17 குளோப்மாஸ்டர் வானூர்தி ஆக்ராவிலிருந்து 73 மருத் துவப் பணியாளர்கள் மற்றும் உபகரணங்களுடன் இலங்கைக்கு அனுப்பப்பட் டதாக இந்திய வெளிவிவ கார அமைச்சு தெரிவித்துள் ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
திட்டவட்டமாக காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். மனதிற்கு இதமான செய்தி வரும். வியாபா ரத்தில் சலுகைகள் மூலம் லாப மடைவீர்கள். சக ஊழியர் களால்நிம்மதி கிடைக்கும். உழைப்பால் உயரும்

**இடபம்**
உங்கள் பேச்சில் அனுபவஅறிவு வெளிப்படும். உடன் பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப்ப கிர்ந்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் உயர திகாரி சிலசூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள் வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந் ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து போகும் நீங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் உய ரதிகாரி பற்றி விமர்சிக்க வேண்டாம்.

**சிம்மம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். சகோதரர்களால் பகை வரக்கூடும். வியாபாரத்தில் பாக்கிகளை கறாராகப் பேசி வசூலிப்பீர்கள். உழைக்க வேண்டிய நாள்.

**கன்னி**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு இருக்கும். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள்.புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோ கத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**துலாம்**
புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டி களை சமாளிப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**விருச்சிகம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தி யோகத்தில் அலட்சியம் வேண்டாம். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**தனுசு**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. விலை உயர்ந்தப் பொருட் கள் வாங்குவீர்கள். வியாபாரம் தழைக்கும். உத்தி யோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும்.

**மகரம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதா யமும் உண்டு. விலை உயர்ந்தப் பொருட்கள் வாங் குவீர்கள். தாயார் ஆதரித்துப் பேசுவார். பயணங் கள் சிறப்பாக அமையும். வியாபாரம் தழைக்கும்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர் கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். நீண்ட நாட் களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். அதி காரிகள் அதிசயிக்கும் படி நடந்துக்கொள்வீர்கள்.

**மீனம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உறவினர்களில் உண்மையானவர்களை கண்ட றிவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கனவு நனவாகும்.

# 25,000 கொடுப்பனவு பெறும் பயனாளிகள் பெயர்களை காட்சிப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ். மாவட்டத்தில் 25, 000 ரூபாய் கொடுப்பனவு பெறும் பயனாளிகளின் பெயர்களை காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெள்ள நிவாரண கொடுப்பனவு விடயத்தில் தகுதியான ஒருவர் புறக்கணிக்கப்பட்டிருந்தாலும், தகுதியற்ற ஒருவருக்கு வழங்குவதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தாலும் அதற்கு குறித்த பிரிவுக்குரிய கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோர் பொறுப்புக்கூற வேண்டும் என யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் அறிவித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான 25, 000 ரூபாய் கொடுப்பனவு தொடர்பில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரால் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில், தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினுடைய பேரிடர் சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட வீட்டை வசிப்பதற்கு ஏற்றதாக மாற்றுவதற்கும், துப்புரவுப்பணிகளை மேற்கொள்வதற்கும், வீட்டு உபகரணங்களை மீட்டெடுப்பதற்கும், சமூக பொருளாதார அதிர்ச்சிகளை நிர்வகிப்பதற்கும், ஒவ்வொரு வீட்டுக்கும் 25 ஆயிரம் ரூபாய் உதவித்தொகையை உடனடியாக வழங்க வேண்டும்.

அந்த வகையில், தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினுடைய 05ஆம் திகதி கடிதத்தில் முற்றிலும் சேதமடைந்த வீடுகள், பகுதி சேதமடைந்த வீடுகள், வீடுகளுக்கு சேதம் ஏற்படாவிட்டாலும் சிறிய வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகள், உதவித்தொகையை பெறுவதற்கு தகுதியானவை என்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அனைத்து கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தருக்கு சரியான தெளிவுபடுத்தலை வழங்க வேண்டியது பிரதேச செயலரின் கடமையாகும்.

இவ்வாறான வெள்ள அனர்த்த நிலைமைகளின் போது அனைத்து கிராம மட்ட அலுவலர்களும் நேரடியாக பிரிவுக்கு சென்று தரவுகளை பெற்றுக்கொள்வதனை பிரதேச செயலர் உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

படிவத்தை உரிய முறையில் பூர்த்தி செய்து உறுதிப்படுத்திய வகையில் மேற்படி கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் கொடுப்பனவைப் பெறுவதற்கு தகுதியானவர்களின் பெயர்ப் பட்டியலை இற்றைப்படுத்தி உறுதி செய்து கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகத்தில் தமிழ் மொழியில் காட்சிப்படுத்தி அதன் மென்பிரதியை மாவட்ட செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## பேரிடரால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபரும் அரசாங்கத்தால் புறக்கணிக்கப்படமாட்டார்கள்

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

புத்தளம், டிசெ. 09

பேரிடரால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் மற்றும் இந்தத் துறையுடன் தொடர்புடைய எந்தவொரு நபரும் அரசாங்கத்தால் ஒருபோதும் புறக்கணிக்கப்படமாட்டார்கள் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை தாக்கம் காரணமாக புத்தளம் மாவட்டம் பேரிடரை எதிர்கொண்டுள்ளது. குறிப்பாக கடற்றொழில் மற்றும் இறால் பண்ணைத் துறை பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. பலத்த காற்று, தொடர்ச்சியான மழை மற்றும் சூறாவளி நிலை காரணமாக புத்தளத்தில் உள்ள 600இற்கு மேற்பட்ட இறால் பண்ணைகள் சேதமடைந்துள்ளன. இந்த பாதிப்பை நேரில் ஆய்வு செய்ய அமைச்சர் சந்திரசேகர் நேற்று முன்தினம் புத்தளத்துக்கு பயணம் மேற்கொண்டார்.

இதன்போது பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் மற்றும் பண்ணையாளர்களை சந்தித்து அவர்கள் எதிர்கொண்ட சேதங்கள், உடனடி தேவைகள் மற்றும் எதிர்கால குறைகள் தொடர்பில் விரிவாக கேட்டறிந்தார். பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. இதனுடன், எதிர்காலத்தில் கடற்றொழில் துறையை மீண்டும் கட்டியெழுப்பும் வகையில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் பற்றியும் அமைச்சர் விவரித்தார். தொழிலாளர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை விரைவில் மீண்டும் தொடங்கும் வகையில் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

மக்கள் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்புவதற்குத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்பதே அரசாங்கத்தின் உறுதிப்பாடாகும் என்றும் அவர் கூறினார். (எ)

## வடக்கு, கிழக்கில் மழை அதிகரிக்கும்

கொழும்பு, டிசெ. 09

வடகீழ் பருவப் பெயர்ச்சிக்குரிய காலநிலை நாடு முழுவதிலும் படிப்படியாக ஆரம்பிக்கின்றது. இதனால், வடக்கு - கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் மழையுடனான வானிலை அதிகரித்து காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் அடிக்கடி மழை பெய்யக்கூடும்.

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் சில இடங்களில் 50 மில்லி மீற்றரிலும் கூடிய ஓரளவு பலத்த மழை பெய்யலாம்.

நாட்டின் ஏனைய பிராந்தியங்களின் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொது மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொத்துவில் தொடக்கம் மட்டக்களப்பு, திருகோணமலை ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களில் அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## வடமராட்சி கடற்கரையில் வெள்ளை நுரை

யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ்ப்பாணம், வடமராட்சி கடற்பகுதியில் வெள்ளை நுரை கரையொதுங்கியதால் அப்பகுதி மக்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை இறங்குதுறையை அண்டிய கடற்பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை வெள்ளை நுரை கரையொதுங்கியதால் மக்கள் அச்சத்தில் உள்ளனர். (எ)

# திருவிளையாடல் புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிசெ. 09

தெல்லிப்பழை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் [illegible] பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்த திருவிளையாடல் புராண சிறப்பு சொற்பொழிவுத் தொடர் 35 எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குரு பூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் இளஞ்சைவப்புலவர் நித்திய பாபுதரன் "இசைவாது வென்ற படலம்" என்னும் தலைப்பில் நிகழ்த்தும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற வானிலை காரணமாக 1000 பாடசாலைகள் பாதிப்பு!

## கல்வி அமைச்சின் செயலாளர் தகவல்

கொழும்பு, டிசெ. 09

**சீரற்ற வானிலை காரணமாக நாட்டின் 9 மாகாணங்களிலும் சுமார் ஆயிரம் பாடசாலைகள் ஏதோ ஒரு வகையில் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க களுவெவ தெரிவித்தார்.**

அதற்கமைய, பாடசாலை செல்லும் சுமார் ஒரு இலட்சம் மாணவர்கள் இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், அனர்த்தத்தினால் கடுமையாகப் பாதிக்கப்படாத பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளை இம்மாதம் 16 ஆம் திகதி திறப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

"எந்தப் பிரதேசத்தில், எந்தப் பாடசாலைகள் திறக்கப்படும் என்பது குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பை விரைவில் வெளியிட எதிர்பார்த்துள்ளோம்.

இப்பாடசாலைகளைத் திறப்பதுடன், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் நடத்தப்படாத



வினாத்தாள்களை 2026 ஜனவரி மாதத்தில் நடத்துவதற்கு தற்போது முயற்சிக்கப்பட்டு வருகிறது" எனவும் அவர் கூறினார். (அ)

# பேரிடரால் மன அழுத்தம் ஏற்பட்டால் 1926 என்ற இலக்கத்தை அழைக்கவும்!

கொழும்பு, டிசெ. 09

பேரிடர் காரணமாக மன அழுத்தத்தை அனுபவித்தால், தேசிய மனநல நிறுவனத்தின் 1926 என்ற துரித இலக்கத்தை அழைத்து தேவையான ஆலோசனைகளைப் பெறுமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக ராகம மருத்துவ பீடத்தின் சிறுவர் மற்றும் இளம் பருவ மனநல மருத்துவ நிபுணரான பேராசிரியர் மியுரு சந்திரதாச கூறுகையில்-

இதுபோன்ற பேரழிவுக்குப் பிறகு, அது நம் மனதை நேரடியாகப் பாதிக்கக்கூடும். இதன் விளைவாக, மக்களிடையே மன அழுத்தம் பொதுவானது.

நீங்கள் அத்தகைய அழுத்தத்தில் இருந்தால், முதலில் பிரச்னையை அடையாளம் காண வேண்டும். பின்னர் அந்தப் பிரச்னையைத் தீர்க்க என்ன செய்ய வேண்டும் என்பதற்கான தீர்வை அடையாளம் காணவேண்டும்.

இந்த சூழ்நிலையால் யாராவது கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தால், அருகிலுள்ள அரச மருத்துவமனையில் மருத்துவரை சந்தித்து தேவையான ஆலோசனைகளைப் பெறவேண்டும்.

இந்தப் பேரிடர் காரணமாக சிறுவர்கள் மன அழுத்தத்துக்கு ஆளானால், முடிந்தவரை அவர்களின் வாழ்க்கையை இயல்பாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நீங்கள் மன அழுத்தத்தில் இருந்தால், எரிச்சல், தூக்கமின்மை, பசியின்மை மற்றும் சோர்வு போன்ற அறிகுறிகளை நீங்கள் அனுபவிக்கலாம்-என்றார். (அ)

# பூஸா சிறைக்குள் அமைதியின்மை; சிறைச்சாலை அத்தியட்சகர் காயம்

கொழும்பு, டிசெ. 09

பூஸா சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது, குறித்த சிறைச்சாலையின் அத்தியட்சகர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

பூஸா சிறைச்சாலையில் உள்ள கைதிகள் சிலரை அவர்கள் தங்கியிருக்கும் சிறை அறைகளிலிருந்து வேறு சிறை அறைகளுக்கு மாற்ற முற்பட்டபோதே இந்த அமைதியின்மை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இடமாற்றங்களுக்குக் கைதிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதோடு, இதன்போது கைதிகள் நடத்திய தாக்குதலில் சிறைச்சாலை அத்தியட்சகர் ஒருவருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறைச்சாலை அத்தியட்சகரின் மூக்கில் காயம் ஏற்பட்டுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

எவ்வாறாயினும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் 2 பேர் காரில் வைத்து கைது

கொழும்பு, டிசெ. 09

பனாமுரே- மீதெனிய வீதியில் லெல்லாவல பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரொன்றில் பயணித்த வேளையில், பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அவர்களிடமிருந்து 190 கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரும் செவனகல பகுதியைச் சேர்ந்தவர்கள்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பனாமுரே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மண் சரிவில் மலையக ரயில் மார்க்கம் கடுமையாக சேதம்!

கொழும்பு, டிசெ. 09

அண்மையில் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவில் மலையக ரயில் மார்க்கம் கடுமையாக சேதமடைந்துள்ளது

மலையக மார்க்கத்தின் கொட்டகலை-வட்டகொட-ரதல்ல-அம்பேவல வரையான பல பகுதிகளில் மண்மேடுகள் சரிந்துள்ள வீழ்ந்துள்ளதுடன் ரயில் தண்டவாளங்களில் மண் மேடுகள் நிரம்பியுள்ளன.

இந்த நிலையில் குறித்த ரயில் பாதையை புனரமைக்கும் நடவடிக்கைகள் பதுளை ரயில் நிலைய பராமரிப்பாளர்களினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

# மனித பாவனைக்கு உதவாத 12,000 கிலோ இறைச்சி மீட்பு!

கொழும்பு, டிசெ. 09

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள ஒரு கால்நடை பண்ணையில் சேமித்து வைக்கப்பட்டிருந்த மனித பாவனைக்கு தகுதியற்ற சுமார் 12,000 கிலோ கிராம் இறைச்சியை கண்டறியப்பட்ட நிலையில் அதற்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைக்குள் வெள்ள நீர் புகுந்ததாலும், குளிர்சாதன வசதி பாதிக்கப்பட்டதாலும், மின் தடை ஏற்பட்டதாலும் இறைச்சி இருப்பு பழுதடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் கீழ் இயங்கும் பேரிடர் முகாமைத்துவ அவசர இலக்கத்துக்கு (1926) இது தொடர்பாக அளிக்கப்பட்ட முறைப்பாடுக்கு இணங்க குறித்த இறைச்சியின் இருப்பு கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அதற்கு சீல் வைக்கப்பட்டதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இறைச்சியின் மாதிரிகள் அரச ஆய்வாளருக்கு மேலதிக பரிசோதனைக்காக அனுப்பப்பட உள்ளன.

ஆய்வாளரின் அறிக்கையின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கண்டி மாவட்டத்தில் மட்டும்

# 35 மாணவர்கள், 10 ஆசிரியர்கள் அனர்த்தத்தில் உயிரிழந்தனர்!

கண்டி, டிசெ. 09

வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக கண்டி மாவட்டத்தில் 35 பாடசாலை மாணவர்கள் மற்றும் 10 ஆசிரியர்கள் உயிரிழந்தனர் என்று மத்திய மாகாண கல்வி பணிப்பாளர் நிஹால் அழகக்கோன் தெரிவித்தார்.

அத்துடன் மாத்தளை மாவட்டத்தில் ஒரு பாடசாலை மாணவன் உயிரிழந்ததாகவும் நுவரெலியா மாவட்டத்தின் தகவல்கள் தற்போது திரட்டப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் காணாமல் போன மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை இன்னும் உறுதிப்படுத்தப்படாத நிலையில், கண்டி மாவட்டத்தில் 97, 850 பாடசாலை மாணவர்கள் அனர்த்த நிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த நிலையில் மாத்தளை மாவட்டத்தில் 8, 500 பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெரிய எண்ணிக்கையிலான மாணவர்கள் தற்போது இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள நிலையில், எதிர்வரும் 16 ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்படும்போது, அவர்கள் அருகில் உள்ள பாடசாலைக்கு சென்று தமது கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக கல்வி பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (எ)

## ஹற்றன் ரோதஸ் பகுதியில் மீண்டும் மண்சரிவு அபாயம்



ஹற்றன், டிசெ. 09

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாட் களாக பெய்து வரும் கன மழை காரணமாக ஹற் றன் ரோதாஸ் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் ஒரு வீடு சேதமடைந்துள்ளது, மேலும் மற்றொரு வீடும் மண்சரிவு அபாயத்தில் உள்ளது. கடந்த சில நாட்களாக பெய்து வரும் கன மழை யால் அப்பகுதி மண்சரிவு அபாயத்தில் இருந்த நிலையில், கடந்த 6 ஆம் திகதி நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட சேதம் இன் னும் மதிப்பிடப்படவில்லை. இந்த வீடுகளில் உள்ளவர்கள் தங்கள் உறவினர்களின் வீடுகளுக்குச் சென்றுள்ளனர். (எ)

## கரையொதுங்கிய சடலம் கடற்படையினருடையதா?

திருகோணமலை, டிசெ. 09

திருகோணமலை வாகரை கடற்கரையில், அடையாளம் காண முடியாதவாறு சடலம் ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கரையொதுங்கியது

கடலில் நிலவி வரும் சீரற்ற காலநிலையால் குறித்த சடலம் பல நாட்களின் பின் கரையொதுங்கியது சுண்டிக்குளம் சாலை கடற்பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு ஐந்து கடற்படையினர் தொடுவாய் வெட்டச் சென்ற நிலையில் காணாமல் போயிருந்தனர்

இவர்களை பல நாட்களாக கடற்படை தேடி வருகின்ற நிலையில் ஞாயிற்றுக்கிழமை அன்று திருகோணமலை வாகரைப் பகுதியில் இனம் தெரியாத சடலம் ஒன்று இவ்வாறு கரையொதுங்கியது

சடலத்தை அடையாளம் காணும் செயல்பாடு தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (எ)

## நன்னீர் மீன்களுக்கான கிராக்கி அதிகரிப்பு

கல்முனை, டிசெ. 09

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக மக்களின் மீன் பாவனைக்கான தேவை அதிகரித்துள்ள நிலையில் கடல் சீற்றம் காரணமாக கடல் மீன்களின் விலையும் அதிகரித்துள்ளதால் நன்னீர் மீன்களுக்கான கிராக்கி தற்போது அதிகரித்துள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தின் நன்னீர் மீன்பிடியாளர்கள் தற்போது வெள்ள நிலைமைகள் சீரடைந்துள்ள காரணத்தால் தற்போது அவர்களுக்கான வருமானம் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை படுவான்கரை பகுதியிலும் அதிகளவிலான நன்னீர் மீன்பிடியாளர்கள் மீன்களை விற்பனை செய்வதனை காணக்கூடியதாக இருந்தது.

அதில் கோல்டன், கெளுத்தி, செத்தல், முண்டான், ஒட்டியான், சுங்கான், சள்ளல், போன்ற மீன் இனங்களை விற்பனை செய்வதை காணக்கூடியதாக இருந்தது.

ஒரு கிலோ கிராம் மீன் 800 ரூபாய் தொடக்கம் ஆயிரம் ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டது. (எ)

## நுவரெலியாவுக்கான பல வீதிகள் மீண்டும் வழமைக்கு திரும்பின

நுவரெலியா, டிசெ. 09

நுவரெலியாவுக்குள் பிரவேசிக்கும் பல வீதிகள் வழமைக்குத் திரும்பியுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் துஷாரி தென்னக்கோன் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதற்கமைய, மஹியங்கனையிலிருந்து நுவரெலியா வரையிலான வீதி, போக்குவரத்துக்காக முழுமையாகத் திறக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நுவரெலியாவிலிருந்து கினிகத்தேன ஊடாக கொழும்பு செல்லும் வீதியும் நுவரெலியாவிலிருந்து பெகவந்தலாவ ஊடாக கொழும்பு செல்லும் வீதியும் தற்போது போக்குவரத்துக்காக திறக்கப்பட்டுள்ளது.

மேலும் ரேந்தபொல ஊடாக வெலிமடை - பண்டாரவளை வீதி மற்றும் உடபுஸ்ஸல்லாவ வீதி என்பனவற்றையும் தற்போது திறக்க முடிந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

நுவரெலியா - கண்டி பிரதான வீதியின் இறம்பொடை பகுதியில் வீதிப் புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வருவதாகவும், அதனை திறப்பதற்கு இன்னும் சில நாட்கள் செல்லும் எனவும் அவர் கூறினார்.

ரயில் பாதைகளை சீரமைக்கும் பணிகள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுவதாகவும் தற்போது திறக்கப்பட்டுள்ள வீதிகளில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## கிழக்கில் டித்வா புயலால் 221 பாடசாலைகள் பாதிப்பு

திருகோணமலை, டிசெ. 09

கிழக்கு மாகாணத்தில் டித்வா புயல் மற்றும் மழை வெள்ளம் காரணமாக 221 பாடசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர தெரிவித்தார்.

இதன்படி மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய 15 கல்வி வலயங்களில் மொத்தமாக 221 பாடசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மூன்று மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை வலய ரீதியாக வருமாறு,

திருகோணமலை மாவட்டம்:

மூதூர் வலயம் -25, கந்தளாய் - 15, கிண்ணியா -12 திருகோணமலை வடக்கு - 04, இதன்படி மாவட்டத்தில் 56 பாடசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டம்: மட்டக்களப்பு - 32, மட்டக்களப்பு மத்தி - 13, மட்டக்களப்பு மேற்கு - 13, கல்குடா - 23 பட்டிருப்பு -14, மொத்தம் 95 பாடசாலைகள்.

அம்பாறை மாவட்டம்: அம்பாறை - 03, தெகியத்தகண்டி - 12, அக்கரைப்பற்று- 23, கல்முனை- 17, சம்மாந்துறை -06, திருக்கோவில் -09 மொத்தம் -70 பாடசாலைகள்.

இவ் புள்ளி விவரங்களின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் 95 என்ற அதிகூடிய எண்ணிக்கையான பாடசாலைகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

அதனையடுத்து அம்பாறையில் 70 பாடசாலைகளும், திருகோணமலையில் 56 பாடசாலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை அடுத்த தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட முன்னர் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் அனைத்தும் துரித கதியில் மீள திருத்தி அமைக்கப்படும் எனவும் ஆளுநர் கூறினார். (எ)

## காவு கொள்ளும் கரையோரம்: கல்முனைக்கு புதிய சவால்கள்

கல்முனை, டிசெ. 09

சமீபத்தில் ஏற்பட்ட கடலரிப்பு காரணமாக கல்முனை பிரதேசத்தின் பல கரையோரப் பகுதிகள் கடலில் மூழ்கிக் கொண்டிருப்பது உள்ளூர் மக்களிடையே அச்சத்தையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தொடர்ச்சியாக பல நாட்களாக கடல் அலைகள் அதிகரித்துள்ளதால் கரையோர மணற்பரப்புகள், மீனவர்களின் உபகரண தொகுதிகள் மற்றும் சில அபிவிருத்தித் திட்டங்கள் கடலுக்குள் செல்லும் நிலை உருவாகியுள்ளது.

கல்முனை பகுதிகளில் கடலரிப்பு தீவிரமடைந்த நிலையில், கரையோரம் சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களும் நேரடியாக பாதிப்புக்குள்ளாகியுள்ளன. குறிப்பாக கரையோர பாதுகாப்பு கற்சுவர் பாதிக்கப்பட்டது, சில இடங்களில் முழுமையாக இடிந்தது. இதனால் கடல் அலைகள் வீதிகளுக்குள் திடீரென நுழைவதற்கான சூழல் உருவாகியுள்ளது.

பெரும்பாலான மீன்பிடி குடும்பங்கள் தற்போது வாழ்வாதார சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. கடலரிப்பால் மீன்பிடி படகுகள் கரையோரத்தில் நிறுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

“நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் கடலரிப்பை எதிர்கொள்கிறோம். ஆனால், இம்முறை ஏற்பட்ட சேதம் அதிகம். கரையோரம் கண்முன்னே கடலில் கரைகிறது” - என உள்ளூர் மீனவர் ஒருவர் வருத்தம் தெரிவித்தார். (எ-06)

## அம்பாறையில் மின் விநியோகம் மீண்டும் வழமைக்கு திரும்பியது

கல்முனை, டிசெ. 09

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கான மின் விநியோகம் வழமைக்குத் திரும்பியது.

சனிக்கிழமை மாலை 05: 47 மணி முதல் அம்பாறை மாவட்டத்துக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டது.

பல நாட்களாக நீடித்த மின் தடைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ள நிலையில் மின்சார விநியோகத்தை சீராக நிலைநிறுத்திய மின்சார சபைக்கு பொதுமக்கள நன்றிகளை தெரிவித்தனர்.

இதனால் மக்களின் அன்றாட வாழ்க்கை, தொழில், கல்வி மற்றும் தகவல் தொடர்பு மீண்டும் வழமையான பாதைக்கு திரும்பியுள்ளதை காண முடிந்தது. (எ)

## நிலத்தில் பெரிய வெடிப்பு: மக்கள் மத்தியில் அச்சம்

கண்டி, டிசெ. 09

நாவலப்பிட்டி, மாவத்துற, ரிவர்சைட் பகுதியில் நிலத்தடியில் பாரிய வெடிப்பு இருப்பதால் அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் அச்சம் நிலவுகிறது.

மக்கள் குறிப்பாக இரவு நேரங்களில் பாதுகாப்பான இடங்களில் தங்குமாறு அப்பகுதி கிராம உத்தியோகத்தர் எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்த பிரதேசத்தில் சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

நிலத்தில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாக மக்கள் பீதியடைந்த நிலையில், அனர்த்த நிலைமை குறித்து மேலும் அதிகாரபூர்வ விளக்கம் தேவைப்படுகிறதென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிவாரண...

இதனொரு கட்டமாக யாழ். மாவட்டத்திற்கான நிவாரணப் பொதிகள் நேற்று மதியம் மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபனிடம் விமானப் படை அதிகாரிகளால் கையளிக்கப்பட்டன.

யாழ். மாவட்டத்துக்கென **192** பிறீமா நூடில்ஸ் பெட்டிகளும் **150** கோதுமை மா மூடைகளும் கையளிக்கப்பட்டன. (அ)

## நாயாறு...

இதனால் குறித்த படகு சேவையை பயன்படுத்து வோர் மாலை ஆறு மணிக்கு முன்னர், பயண ஆரம்ப இடத்திற்கு வருகைதர வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மாலை ஆறு மணிக்கு பின்னர் படகுச் சேவை நிறுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவசர தேவைகள், நோயாளர்கள் மற்றும் கர்ப்பவதி தாய்மார்களுக்காக மாத்திரமே **24** மணித்தியால இலவச படகுச் சேவை முன்னெடக்கப்படும் என இலங்கை கடற்படை அறிவித்துள்ளது.

அண்மையில் நிலவிய அதிதீவிர வானிலையால் நாயாறு பாலம் சேதமடைந்தது. இதனால் குறித்த வீதியுடனான போக்குவரத்தும் தடைப்பட்டது.

இந்த நிலையில் இலங்கை கடற்படையினரால் இலவச படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இதனால் தனியாரினால் முன்னெடுக்கப்படும் பாதுகாப்பற்ற படகுச் சேவையை பயன்படுத்துவதை தவிர்க்குமாறு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வடக்கில்...

கலந்துரையாடலில் உரையாற்றிய ஆளுநர், ஒவ்வொரு மாவட்டமும் வெள்வேறு விதமான பாதிப்புகளைச் சந்தித்துள்ளன. குறிப்பாக உடைப்பெடுத்த குளங்களை அண்மித்த பகுதிகளில் மக்கள் மிகப்பெரிய இழப்புகளைச் சந்தித்துள்ளனர். பாதிக்கப்பட்ட அனைத்துப் பிரதேசங்களிலும் இயல்பு நிலையைத் துரிதமாக ஏற்படுத்த வேண்டும் என்பதே மாண்புமிகு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவர்களின் உறுதியான வலியுறுத்தலாகும்.

அதிகாரிகள் தற்துணிவுடன் செயற்பட வேண்டும். உங்களிடம் நேர்மை இருக்குமாயின், எதற்கும் அஞ்சத் தேவையில்லை. துணிந்து முடிவுகளை எடுங்கள். உங்களின் தயக்கத்தாலோ அல்லது தற்துணிவின்மையாலோ மக்களுக்கான சேவைகள் ஒருபோதும் தாமதமடையக்கூடாது, எனச் சுட்டிக்காட்டினார்.

விவசாய மற்றும் கால்நடை இழப்பீடுகள் தொடர்பில் அதிகாரிகளுக்கு அறிவுறுத்திய ஆளுநர், "பாதிக்கப்பட்ட மக்கள் தமது இழப்புக்களைப் பதிவு செய்ய அலுவலகங்களுக்கு வரும்வரை காத்திருக்க வேண்டாம். நீங்களே நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டுப் பதிவுகளை மேற்கொள்ளுங்கள். அத்துடன், மீள் விதைப்புச் செய்யக்கூடிய இடங்களில் அதற்கான உடனடி நடவடிக்கைகளை முன்னெடுங்கள்.

நிதியை விடுவிப்பதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது. அரச சுற்றறிக்கைகளுக்கு அப்பால் வடக்கு மாகாணத்துக்கு விசேட நிதியுதவி தேவைப்படின், அதனைக் கோருவதற்கும் நாம் தயாராக உள்ளோம். வாழ்வாதாரங்களை இழந்து நிர்க்கதியாகி நிற்கும் மக்களை மீளக் கட்டியெழுப்புவது நம் அனைவரினதும் கூட்டுப் பொறுப்பாகும், என்றார்.

விவசாயம் மற்றும் கால்நடைத் துறை சவால்கள் இதன்போது கருத்துத் தெரிவித்த விவசாய அமைச்சின் செயலாளர், வெள்ளம் காரணமாக வயல் நிலங்களில் குவிந்துள்ள வீதி எச்சங்களை அகற்றுதல், மீள் விதைப்புச் செய்வதிலுள்ள சிக்கல்கள் மற்றும் பயிர்களுக்கு ஏற்படக்கூடிய நோய்த் தாக்கங்கள் குறித்தும், அதனால் எதிர்காலத்தில் விளைச்சல் குறையக்கூடிய அபாயம் குறித்தும் விளக்கமளித்தார்.

அதேவேளை, கால்நடைகளுக்கான தொடர் சிகிச்சை முகாம்கள் நடத்தப்படுவதாகவும், மருந்துகள் இலவசமாக வழங்கப்படுவதாகவும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையின் கீழ் முன்னெடுக்கப்படும் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் பேரிடரால் ஏற்பட்ட பின்னடைவுகள் குறித்தும் ஒவ்வொரு அமைச்சு ரீதியாக ஆராயப்பட்டது. பௌதீக ரீதியாக வேலைகள் முடிவுற்ற போதிலும், சிட்டைகள் வழங்கல் தாமதத்தால் ஏற்படும் சிக்கல்கள் குறித்தும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். அனர்த்தத்தால் ஏற்பட்ட விரிவான இழப்பீட்டு மதிப்பீட்டை ஜனாதிபதி செயலகத்துக்கு விரைவாக அனுப்பி வைக்குமாறும் ஆளுநர் இதன்போது பணித்தார்.

இக்கலந்துரையாடலின் நிறைவில், வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வடிவமைக்கப்பட்ட, முறைப்பாடுகளை இலகுவாக முன்வைப்பதற்கான புதிய செயலி ஆளுநரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. (அ)

## ரூ. 400 மில்லியன்...

மற்றும் படுக்கை விரிப்புகள் ஆகியவை அடங்கும்.

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அனுர கருணாதிலகா, பாதுகாப்பு துணை அமைச்சர் அருண ஜயசேகர மற்றும் இலங்கைக்கான சீனத் தூதர் ஜென்ஹோங் உள்ளிட்ட ஒரு பெரிய குழு உதவியைப் பெறுவதற்காக விமான நிலையத்திற்கு வந்திருந்ததாகவும் விமான நிலைய அதிகாரிகள் கூறினர்.

## நாட்டு மக்கள்...

வீடுகள் சேதமடைந் துள்ளன, குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன, குழந்தை களுக்கு உணவோ சுத்தமான நீரோ இல்லை. பலர் தற்கா லிக முகாம்களில் வாழ்கிறார்கள், சிலர் வெள்ள நீரில் நாளுக்கு நாள் நடந்து செல்கிறார்கள். மழை குறைந்த பின்னரும் வீடுகள் கிடைப்பது உறுதி இல்லை.

இதனால் அவசரமாக பாராளுமன்றத்தை கூட்டுமாறு பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் உத்தியோக பூர்வமாக கோரியுள்ளேன்.

**25** மாவட்டங்களிலும் வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக பத்து இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நேரத்தில் நாம் கால தாமதம் செய்யக்கூடாது. ஒவ்வொரு குடும்பமும் பாதுகாப்பான நிலைக்கு மாறும் வரை, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் வரை, அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து கண்காணிக்க வேண்டும்.

இது குறித்து விவாதிக்க பாராளுமன்றம் ஒவ்வொரு வாரமும் கூட வேண்டும்" என நாமல் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். (அ)

## இந்திய...

வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கிருஷ்ணன் அகிலனை நேற்று திங்கட்கிழமை நேரில் சந்தித்து, இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரினர்.

அதன் பின்னர் அவர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்-

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் எமது கடல் வளங்கள் அழிக்கப்படுவதும் எமது வலைகள் சேதமாக்கப்பட்டு வாழ்வாதாரத்தை அழிப்பதுடன் பொருளாதார ரீதியாகவும் எமக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றனர்.

எனவே இந்திய மீனவர்களை கட்டுப்படுத்த உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லை எனில் நாமே கடலில் இறங்கி அவர்களுக்கு எதிராக போராடுவோம்.

இதன் முதல் கட்டமாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நீரியல்வளத் திணைக்களத்தின் முன்னிருந்து போராட்டம் ஒன்றை ஆரம்பித்து மாவட்ட செயலகம் வரை செல்லவுள்ளோம். அங்கு மாவட்ட செயலக வாயிலை மூடி எமது போராட்டத்தை முன்னெடுக்க உள்ளோம் - என்றனர். (அ)

## கொழும்பில்...

உருவாகும் மேக மூட்டம் இந்த வாரம் புயலாக உருவாகக்கூடும் என்றும் பிபிசி வானிலை ஆய்வாளரான லூயிஸ் லியர் தெரிவித்துள்ளார்.

அது புயலாக மாறினாலும் இல்லாவிட்டாலும், இன்று செவ் வாய்க்கிழமையும் இலங்கையின் சில பகுதிகளில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக என்று லூயிஸ் லியர் தெரிவித்துள்ளார்.

இந்த மழையுடனான வானிலை இலங்கையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது, இதனால் நாடு சீரற்ற கன மழை பொழிவை எதிர்கொள்ளும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இன்று முதல் எதிர்வரும் **12**ஆம் திகதி வரை நாட்டில் மழை தீவிரமடையும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அணையா...

குமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாநகர சபை உறுப்பினர் சண்முகநாதன் பிரதீபன் செய்துள்ளார்.

செம்மணி படுகொலைக்கு நீதி கோரி கடந்த ஜூன் மாதம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் நினைவாக செம்மணியில நினைவுத்தூபி அமைக்கப்பட்டிருந்தது. இவ்வாறான நிலைமையில் கடந்த ஒக்ரோபர் மாதம் இனந் தெரியாதோரால் இவ் நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்டிருந்தது. எனினும் உடனடியாக புதிய நினைவுத் தூபி மீளவும் அமைக்கப்பட்டது.

இந்நிலைமையில் நேற்றையதினம் மீளவும் இனந் தெரியாதோரால் இத் தூபி இடித்தழிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இத் தூபியை சேதமாக்கிய சம்பவத் [illegible] வேண்டு [illegible] நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தது. (அ)

## கடற்படையினரை...

ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லுங்கள் என வடக்கு மாகாண ஆளுநரிடம் பேருந்தில் பயணித்த மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பேரிடரின்போது புத்தளம் ஏ-**12** வீதியில் பெருக்கெடுத்த கலா வாவி வெள்ளத்தில் சிக்குண்ட பேருந்திலிருந்து மீட்கப்பட்ட மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள், தமது மீட்பு நடவடிக்கைகளுக்குத் துரித நடவடிக்கை எடுத்தமைக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக, வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனிடம் நேற்று திங்கட்கிழமை கடிதமொன்றைக் கையளித்தனர்.

இதன்போது, பல்கலைக்கழக மாணவர்களின் உடல் மற்றும் உள நலம் குறித்து ஆளுநர் விசாரித்தறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, பேரிடரின்போது தாம் எதிர்கொண்ட சவாலான அனுபவங்களை மாணவர்கள் ஆளுநருடன் பகிர்ந்துகொண்டனர்.

இதன்போது, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தங்களது சக பயணி ஒருவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு, பின்னர் சடலமாக மீட்கப்பட்ட துயரச் சம்பவம் குறித்தும், அந்தத் தருணத்தில் அவர்கள் எதிர்கொண்ட நெருக்கடி நிலை குறித்தும் ஆளுநரிடம் விவரித்தனர்.

மேலும், மீட்புப் பணிகளுக்காக வருகை தந்த மூன்று கடற்படை வீரர்கள், வெள்ளம் சூழ்ந்த அந்த ஆபத்தான சூழலில் **24** மணி நேரத்துக்கும் மேலாகத் தம்முடன் தங்கியிருந்ததோடு, வெள்ளத்தில் வீழ்ந்த சிலரையும் உயிருடன் மீட்டனர் என்பதையும் மாணவர்கள் ஆளுநரிடம் நினைவு கூர்ந்தனர்.

இத்தகைய அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அந்தக் கடற்படை வீரர்களைச் சிறப்பிக்குமாறு ஜனாதிபதியிடம் பரிந்துரைக்குமாறும் மாணவர்கள் ஆளுநரிடம் விசேட வேண்டுகோள் விடுத்தனர்.

மிகவும் ஆபத்தான சூழலில், எவ்வித தாமதமுமின்றி மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவிய அனைத்துத் தரப்பினருக்கும், விசேடமாக மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்தி வழிநடத்திய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்ட மாணவர்கள், இந்த நன்றியுணர்வை வெளிப்படுத்தும் வகையிலான உத்தியோகபூர்வ கடிதத்தை ஆளுநரிடம் சமர்ப்பித்தனர்.

மாணவர்களால் கையளிக்கப்பட்ட குறித்த கடிதத்தை, ஆளுநர் உடனடியாகவே ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லும் வகையில் அனுப்பி வைத்தார். (அ)

## வெளிநாட்டு...

கலந்து கொண்டு பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜெயசேகர இதனை தெரிவித்தார்.

வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் உதவிகள் மற்றும் உபகரணங்கள் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சரியாகக் கிடைப்பதை இந்தக் குழு உறுதி செய்யும் எனவும் இந்தக் குழு நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தக் குழுவின் தலைவராக பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜெயசேகர நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## இலங்கையின்...

ஒருங்கிணைப்பு அலுவலகத்திலி ருந்து ஐவர் கொண்ட குழு ஏற்கனவே இலங் கைக்கு வந்துள்ளதாக குறிப்பிட்டார்.

தொடர்புடைய அனைத்து ஒருங்கிணைப்புகளுக்காகவும் இலங்கையின் பேரிடர் மேலாண்மை மையத்துடன் நெருக்கமாக பணியாற்ற ஐ.நா. எதிர்பார்க்கிறது.

இந்தப் பேரிடர் நாட்டின் மக்கள் தொகை, பொருளாதாரம், விவசாயத் துறை மற்றும் அத்தியாவசிய உள்கட்டமைப்பை கடுமையாகப் பாதித்துள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் ஹேரத், தேசிய மீட்பு முயற்சிகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

இலங்கையின் மறுகட்டமைப்பு திட்டத்திற்கு பங்களிக்கும் சர்வதேச பங்காளிகளின் ஆதரவை எளிதாக்குவதற்காக, நியூயார்க் மற்றும் ஜெனீவாவில் உள்ள அதன் அலுவலகங்களுடன் ஐ.நா தொடர்ந்து பணியாற்றும் என்று வதிவிடப் பிரதிநிதி குறிப்பிட்டார். (அ)

## 635 பேர்...

பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் **192** பேர் காணாமல் போயுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் **81** பேரும், கேகாலையில் **39** பேரும், நுவரெலியாவில் **37** பேரும் காணாமல் போயுள்ளனர்.

**690** தங்குமிடங்களில், **22,218** குடும்பங்களை சேர்ந்த **69,861** பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அடிப்படை உரிமைகளை கட்டுப்படுத்த அவசரகால சட்டம் பயன்படுத்தப்படாது!

**பொலிஸ் பேச்சாளர் அறிவிப்பு**

கொழும்பு, டிசெ. 09

**அவசரகால சட்டம் தவறான தகவல்களைப் பரப்புவதைத் தடுப்பதற்காக மட்டுமே நோக்கம் கொண்டது என்றும், இது அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்படாது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

பொலிஸ் பேச்சாளரும், உதவி பொலிஸ் அத்தியட்சகருமான எவ். யூ. வூட்லர், கொழும்பு ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே குறித்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொது நலன்புரி முயற்சிகள் மற்றும் நடந்து வரும் நிவாரண நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் தவறான தகவல்களை பரப்பி அச்சத்தை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்படும் இந்த சட்டங்கள், பீதியை உண்டாக்க தகவல்தொடர்பு தளங்களைத் தவறாகப் பயன்படுத்துபவர்களை மட்டுமே குறிப்பாக இலக்கு வைக்கின்றன-என்றார்.

திருத்தப்பட்ட பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 40), கீழ் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் இந்த அவ சரகாலச் சட்டம் வெளியிடப்பட்டுள்ளது.

இது அனர்த்த மீட்பு, பொதுப் பாதுகாப்பு மற்றும் தேசிய ஸ்திரத்தன்மையை வலுப்படுத்த தற்காலிக அதிகாரங்களை வழங்குகிறது.

எனினும், இந்தச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படலாம் என்ற கவலைகளுக்குப் பதிலளிக்கும் வகையில், கடந்த வாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, இந்த அவசரகால சட்டங்கள் கருத்து சுதந்திரத்தை அல்லது அரசாங்கத் தின் விமர்சனத்தை ஒடுக்கப் பயன்படுத்தப்படாது என்று உறுதியளித்தார்.

விமர்சன அல்லது பாதகமான கருத்துக்களால் தாமோ தமது நிர்வாகமோ கலக்கம் அடையவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையே, புதிதாக வெளியிடப்பட்ட அவசரகால சட்டங்களின் சில ஏற்பாடுகள் அரசியலமைப்பிற்கு இணங்கவில்லை என்று அவதானித்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதியிடம் இந்த வாரம் தமது கருத்துக்களை சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. (அ)

# நடப்பாண்டில் இதுவரை 110 துப்பாக்கிச் சூடுகள்!

கொழும்பு, டிசெ. 09

இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து 06ஆம் திகதி வரை நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் 03 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

இதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காயமடைந்துள்ளார்.

இதேவேளை, இந்த ஆண்டில் இதுவரை 110 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதில் 83 சம்பவங்கள் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு இடையேயான மோதல்களென தெரிவிக்கப்படுகின்றது.

அனர்த்த மீட்பு நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் இலங்கையில் குற்றத் தடுப்பு முயற்சிகள் ஒருபோதும் தடைப்படாதெனவும் அத்துடன், அனர்த்தத்தைப் பயன்படுத்த முயலும் நபர்களை அடையாளம் கண்டு விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸ் பேச்சாளர் எவ்.யூ.வூட்லர் தெரிவித்துள்ளார். (அ)

# ஹிருணிகா உள்ளிட்டோருக்கு எதிரான வழக்கு மார்ச் 16 மீண்டும் விசாரணைக்கு!

கொழும்பு, டிசெ. 09

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர மற்றும் 14 சந்தேக நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை 2026 மார்ச் 16 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு தலைமை நீதவான் அசங்க எஸ்.போதரகம நேற்று உத்தரவிட்டார்.

2022 நவம்பர் மாதம், சந்தேக நபர்கள் காவல்துறை கட்டளைச் சட்டம் மற்றும் நெடுஞ்சாலை கட்டளைச் சட்டத்தை மீறி கறுவாத் தோட்டம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் போராட்டம் ஒன்றை மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சந்தேகநபர் ஹிருணிகா பிரேமச்சந்திர மற்றும் பிற பெண் சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையானார்கள்.

உண்மைகளைக் கருத்தில் கொண்ட தலைமை நீதிவான், சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களுக்காக வழக்கை மார்ச் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (அ)

# அவுஸ்திரேலிய தூதுவரை சந்தித்த சஜித் பிரேமதாஸ!



கொழும்பு, டிசெ. 09

டித்வா புயலால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையில் உட்கட்டமைப்பு வசதிகளை மீளமைத்து, மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்குத் தேவையான உதவிகளை வழங்குமாறு அவுஸ்திரேலியாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவரை நேற்று சந்தித்தவேளையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவரை இன்று சந்தித்து பேச்சு நடத்தினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

இலங்கையின் தற்போதைய நிலவரம் தொடர்பில் இரு தரப்பினரும் இங்கு பல கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

புயலால் ஏற்பட்ட பேரழிவு காரணமாக தொழில் முயற்சிகள் அழிந்து போனமை, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுப் போனமை, பல உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் மற்றும் அவை அழிவுண்டமைகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதன்போது தூதுவரிடம் எடுத்துரைத்தார்.

உட்கட்டமைப்பு வசதிகளை மீளமைத்து, மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்குத் தேவையான உதவிகளை பெற்றுத் தருமாறும் கேட்டுக் கொண்டார்.

இந்த இக்கட்டான கட்டத்தில் அவுஸ்திரேலிய, இலங்கைக்கு வழங்கும் உதவிகள் மற்றும் நிவாரண சேவைகளுக்காக அனைத்து இலங்கையர்களின் சார்பாகவும் எதிர்க்கட்சி தலைவர் தூதுவரிடம் நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார். (அ)

# நாற்பது பாலங்கள் அதிகளவில் சேதம்!

**புனரமைக்க 1 1/2 ஆண்டுகள் தேவை**

கொழும்பு, டிசெ. 09

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட அனர்த்தங்களில் சேதமடைந்த பிரதான பாலங்களைப் புனரமைக்கக் குறைந்தது ஒன்றரை ஆண்டுகள் தேவைப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

அத்துடன் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் பாதிக்கப்பட்ட பிரதான வீதிகளை 3 மாத காலப்பகுதிக்குள் புனரமைக்க முடியும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் விமல் கண்டம்பி ஆங்கில ஊடகமொன்றிற்கு தெரிவித்துள்ளார்.

எனினும், சுமார் 40 பாலங்கள் அதிகளவில் சேதமடைந்துள்ளதாகவும், அவற்றை மீட்டெடுக்க 18 மாதங்கள் (ஒன்றரை ஆண்டுகள்) வரை கால அவகாசம் தேவைப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் “ஏ” மற்றும் “பி” தர வீதிகளுக்கு புயலால் ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு சுமார் 190 பில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்திருந்தார். (அ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு வெண்படல நோய் பரவல் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 09

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், பாதுகாப்பு மையங்களில் தங்கியுள்ளவர்களிடையே வெண்படல நோய் பரவ வாய்ப்புள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த தொற்று வேகமாகப் பரவி வருவதாகவும், பல மாவட்டங்களில் தற்போது பாதிப்புகள் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் உட்பட பலருக்கு அறிகுறிகள் காணப்பட்டுள்ளதாகவும் ஆரம்ப அறிகுறிகளைக் கவனித்துப் பரவுவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டு, சுகாதார அதிகாரிகள் விழிப்புணர்வுத் திட்டங்களைத் தொடங்கியுள்ளனர்.

அத்துடன் கண்கள் சிவத்தல், வீக்கம் மற்றும் அரிப்பு போன்ற அறிகுறிகளைக் கவனிக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கை-கண் தொடர்பு, இருமல் அல்லது தும்மல் மூலம் பரவுதல் மற்றும் தனிப்பட்ட பொருட்களைப் பகிர்வதன் மூலம் இந்த நோய் பரவுகின்றது.

அடிக்கடி கை கழுவுதல், கண்களைத் தேய்ப்பதைத் தவிர்த்தல் மற்றும் தனிப்பட்ட பொருட்களைப் பகிர்வதைத் தவிர்ப்பது போன்ற தடுப்பு நடவடிக்கைகளைச் சுகாதார அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர். (அ)

# இந்திய அரசாங்கத்தினால் மேலும் ஒருதொகை நிவாரண பொருட்கள்!

கொழும்பு, டிசெ. 09

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்திற்குத் தொடர்ச்சியாக ஆதரவை வெளிப்படுத்தும் வகையில், இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பெருமளவான நிவாரணப் பொருட்கள் நேற்று முன் தினம் பிற்பகல் கொழும்பு துறைமுகத்தில் பொறுப்பேற்கப்பட்டன.

இந்நிகழ்வில் இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# வெள்ளத்தில் சேதமடைந்த அரிசியை சந்தைப்படுத்திய கும்பல் பிடிபட்டது!

**1,000 கிலோ அரிசி பறிமுதல்**

கொழும்பு, டிசெ. 09

வெள்ளத்தால் சேதமடைந்த, மனிதப் பாவனைக்கு ஒவ்வாத அரிசியைச் சட்டவிரோதமாகப் பதப்படுத்தி சந்தைக்கு விநியோகிக்கும் மோசடிக் கும்பல் ஒன்றைச் சுகாதாரப் பரிசோதகர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கண்டி மாவட்டத்தின் ஹாரிஸ்பத்துவ பிரதேசத்தில் வைத்து சந்தேக நபர்களைச் சுகாதாரப் பரிசோதகர்கள் கைது செய்ததாகவும், அவர்களிடம் இருந்து 1,000 கிலோ கிராம் பதப்படுத்தப்பட்ட அரிசி கைப்பற்றப்பட்டதாகவும் இலங்கைச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் பிரதீப் பொரலெஸ்ஸ தெரிவித்தார்.

நாடு முழுவதும் இவ்வாறான மோசடிச் செயற்பாடுகள் குறித்து அதிகாரிகள் கண்காணித்து வருவதாகவும், இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என்றும் அவர் வர்த்தகர்களை எச்சரித்துள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org